**பாட இலக்கம் : 02**

**தலைப்பு : எமது சமூகம்**

**01. சரியான விடையினை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

1) ..................................................................... என்பதன் மூலம் கருதப்படுவது யாதெனில் சமூகத்தின் இருப்புக்காக பிரசைகள் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான பிணைப்பாகும்.

2) சமூகத்தின் இருப்புக்காக பிரசைகள் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குள்ள கடப்பாட்டை ........................................................................... குறிப்பிடலாம்.

3) சட்டம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றத் தவறும் போது .................................... வழங்கப்படும்.

4) தனது பணியை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றும்போது ................................................ ஏற்படும்.

5) கடமையை நிறைவேற்றுவதற்குள்ள பிணைப்பு ...................................................... எனப்படும்.

( மனநிறைவு, தண்டனை, மனச்சாட்சி, அரசு, பொறுப்பு, கடமை )

**02. பின்வருவனவற்றிற்கு சரி, பிழை இடுக.**

1) சம்பிரதாயத்தைப் பேணுதல் நல்லொழுக்கம் சார்ந்த கடமையாகும். (     )

2) சமூகத்தின் இருப்புக்காக பிரசைகள் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குள்ள கடப்பாடு கடமை எனப்படும். (     )

3) பெற்றோரை கவனிக்காது விடல் சட்டம் சார்ந்த கடமை என இனங்காணப்பட்டுள்ளது. (     )

4) சட்டம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு சட்டத்திற்கு கட்டுப்பட்டுள்ளோம். (     )

5) ஒருவர் நல்லொழுக்கம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு தவறும்போது சமூகத்தில் முன்னுரிமையைப் பெற்றுக்கொள்வார். (     )

**03. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) அரசுக்கு கட்டுப்படுதல் | நற்பிரசை |
| 2) கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றல் | சட்டம் சார்ந்த கடமை |
| 3) சட்டம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றுபவர் | கடமைகளை நிறைவேற்றல் |
| 4) சம்பிரதாயங்களை பாதுகாத்தல் | சகலருக்கும் நல்வாழ்வுக்கான சந்தர்ப்பம் |
| 5) சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதது | நல்லொழுக்கம் சார்ந்த கடமை |

**04. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) கடமை என்பதை சுருக்கமான விளக்குக.

2) கடமையின் இருவகைகளையும் குறிப்பிடுக.

3) சட்டம் சார்ந்த கடமைகள் மூன்றினை குறிப்பிடுக.

4) நல்லொழுக்கம் சார்ந்த கடமைகள் மூன்றினை குறிப்பிடுக.

5) நல்லொழுக்கம் சார்ந்த கடமைகள் இரண்டினை வரைந்து காட்டுக.

6) நல்லொழுக்கம் சார்ந்த கடமைகளை புறக்கணிக்கும் ஒருவர் எதிர்நோக்க வேண்டிய சவால்கள் எவை?

7) உமது குடும்பத்தில் உமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் எவை?

8) உமது பாடசாலையில் உமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் எவை?

9) சமூகத்தில் வாழும் பிரசை என்ற ரீதியில் உம்மிடம் காணப்பட வேண்டிய பொறுப்புகள் நான்கினைத் தருக?

10) கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் சமூகத்தில் கிடைக்கக்கூடிய நன்மைகளை உதாரணம் தந்து விளக்குக.